දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

இளங்கலைமாணி 200 மட்டப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) (2020)

# ECNE 202 பேரினப்பொருளியற் கோட்பாடு

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 8ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
ஒதுக்கப்பட்டுள்ள நேரம்: (3) மூன்று மணித்தியாலங்கள்

1. (i) பிரதானப் பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களைச் சுருக்கமாக விபரித்து, அவற்றுக்கிடையிலான சாத்தியமான முரண்பாடுகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

2. (i) இலங்கையினை உதாரணமாகக் கொண்டு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், தேசிய வருமானத்தினை அளவீடு செய்வதில் காணப்பட்டுள்ள பிரதான பிரச்சினைகளை ஆராய்க. (12 புள்ளிகள்)

   (ii) பொருளாதார செயலாற்றம் மற்றும் பொருளாதார நலன் ஆகியவற்றின் ஒரு அளவீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியினை (GDP)ப் பயன்படுத்துவதில் உள்ள அளவீடு சார்ந்ததும் எண்ணக்கரு சார்ந்ததுமான பிரச்சினைகள் யாவை? (08 புள்ளிகள்)

3. பின்வரும் தொழிற்பாடுகள் மூலம் விபரிக்கப்படுகின்ற பொருளாதாரம் ஒன்றினைக் கவனத்திற் கொள்க:-.

| | |
|---|---|
| நுகர்வு | (C) = 150 + 0.8Yd |
| முதலீடு | (I) = 500 – 5000 r |
| வரி | (tY) = 0.25Y |
| அரசாங்கச் செலவீடு | (G) = 200 |
| மெய் பணத்திற்கான கேள்வி | (L) = 200 + 0.4Y – 2000 r |
| மெய் பணநிரம்பல் | (M/P) = 700 |

(இங்கு Y என்பது தேசிய வருமானம், Yd என்பது செலவிடக்கூடிய வருமானம், r என்பது வட்டி வீதம் ஆகும்) எனில்,

(i) IS வளைகோட்டிற்கு வரைவிலக்கணம் தந்து, IS சமன்பாட்டினைத் தருவிக்குக. (05 புள்ளிகள்)

(i) LM கோட்டிற்கு வரைவிலக்கணம் தந்து LM சமன்பாட்டினை தருவிக்குக. (05 புள்ளிகள்)

(iii) தொடர்புடைய சமநிலைத்தேசிய வருமான (Y) மட்டத்தினையும், சமநிலை வட்டி வீதத்தினையும் (r) நிர்ணயிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஒரு விரிவுத்தாக்க இறைக் கொள்கையானது IS-LM சமநிலையின்மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)

4. ஒரு பொருளாதாரத்தின் குறுங்கால உற்பத்திச் சார்பு $Y = 700 + 4N - 0.01N^2$ எனவும், ஊழியத்திற்கான கேள்விச் சமன்பாடு, $N^d = 200 - 50W/P$ ஆகவும், ஊழியத்திற்கான நிரம்பல் சமன்பாடு $N^s = -300 + 100W$ ஆகவும் காணப்படுகின்றன என்க. மேலும் அதில், பொருளாதார நடவடிக்கையானது, ஆரம்பத்தில், நிறைதொழில்மட்ட வெளியீடான ரூபா 1000/- என்ற மட்டத்தில் காணப்பட்டிருக்க, விலைமட்டம் (P) ரூபா 2/- ஆகவும் உள்ளது என்க. எனில்,

(i) ஊழியச் சந்தைச் சமநிலையினைக் காண்க. (05 புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றினைக் கணிப்பிடுக:-

(அ) வேலை கொள்ளப்படுகின்ற ஊழியத்தின் எண்ணிக்கை (05 புள்ளிகள்)
(ஆ) விலைமட்டம் (05 புள்ளிகள்)
(இ) அரசாங்கச் செலவீட்டிலான அதிகரிப்பின் விளைவாக, மெய் வெளியீடு ரூபா 1075 ஆக அதிகரிப்படைகின்றபோது மெய் கூலி வீதம். (05 புள்ளிகள்)

5. (i) ஒரு IS-LM வரைபடத்தினைப் பயன்படுத்தி , மொத்தக் கேள்வி (AD) வளைகோட்டினைத் தருவிக்குக. (05 புள்ளிகள்)
(ii) மொத்தக் கேள்வி வளைகோட்டினைப் பெயர்வடையச் செய்கின்ற காரணிகள் யாவை? (05 புள்ளிகள்)
(iii) பின்பழம் பொருளியலாளரின் மொத்த நிரம்பல் (AS) தொழிற்பாட்டிற்கும், கெயின்ஸ் அவர்களின் மொத்த நிரம்பல் (AS) தொழிற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினை நீர் எவ்வாறு விளக்குவீர்? (10 புள்ளிகள்)

6. (i) ஒரு மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்கள் யாவை? (05 புள்ளிகள்)

(ii) மத்திய வங்கியானது மேற்படி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான ஒரு கொள்கைக் கருவியாக வட்டி வீதத்தினை எவ்வாறு பயன்படுத்திக் கொள்கின்றது என்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

7. (i) கெயின்சிய நுகர்வுத் தொழிற்பாட்டின் பிரதான எடுகோள்கள் யாவை? அவரின் எடுகோள்களுக்குச் சார்பாகவும், சார்பற்றதாகவும் காணப்படும் சான்றாதாரங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)
(ii) நுகர்வு நடத்தை தொடர்பான மேற்படி சான்றாதாரங்கள் தொடர்பாக வாழ்க்கைச் சுழற்சிக் கருதுகோள், நிரந்தர வருமானக் கருதுகோள் என்பன எத்தகைய இணக்கப்படுத்தும் முடிவுகளை முன்வைத்துள்ளன? (10 புள்ளிகள்)

8. பின்வரும் எவையேனும் <u>நான்கு</u> சோடி எண்ணக்கருக்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக:-

(i) செலவுத்தூண்டல் பணவீக்கமும், கேள்வித்தூண்டல் பணவீக்கமும்
(ii) மெய் வட்டி வீதமும், பெயரளவான வட்டி வீதமும்
(iii) தன்விருப்பு வேலையின்மையும், தன்விருப்பற்ற வேலையின்மையும்
(iv) இறைக் கொள்கைப் பெருக்கியும், சமநிலை பாதீட்டுப் பெருக்கியும்
(v) குறுங்கால பிலிப்ஸ் வளைகோடும், நீண்ட காலப் பிலிப்ஸ் வளைகோடும்
(vi) காசு- வைப்பு வீதமும், ஒதுக்கு- வைப்பு வீதமும்
(vii) சுயாதீனச் செலவீடும், தூண்டப்பட்ட செலவீடும் (தலா 05 புள்ளிகள்)

---